DEPOSITION OF WITNESS

---

IN THE COURT OF SUBORDINATE JUDGE, DEVAKOTTAI.

| | | |
|---|---|---|
| MCOP No. | : | 59/2021 |
| Deposition of Witness for | : | P.W.1 |
| | : | D.W. |
| | : | R.W. |
| | : | Court. |
| Name | : | ஜான்பீட்டர் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 20.03.2025

**முதல் விசாரணை:**

நான் மனுதாரர், நான் இத்துடன் தாக்கல் செய்துள்ள நிரூபணவாக்குமூல்தை முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். எனது தரப்பு கீழ்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1. முதல் தகவல் அறிக்கை சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. போஸ்ட்மாடம் ரிப்போர்ட் சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

3.TN 63 BV 0524 வாகனத்திற்கான மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

4. 2ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் ஆர்.சி புக் உண்மை நகல் **ம.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

5. 2ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் இன்சூரன்ஸ் பாலிசி உண்மை நகல் **ம.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

6. 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் உரிமம் உண்மை நகல் **ம.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

7. பார்வை மகஜர் சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

8.வரைபடம் சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

9. வாரிசுச் சான்றிதழ் நகல் அசலுடன் ஒப்பிடப்பட்டு **ம.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

10. இறப்புச் சான்றிதழ் நகல் அசலுடன் ஒப்பிடப்பட்டு **ம.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

11.மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை சான்றிட்ட நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு **ம.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

12.மனுதாரரின் குடும்ப அட்டை சான்றிட்ட நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு **ம.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

13.மனுதாரரின் பேங்க் பாஸ்புக் சான்றிட்ட நகல் அசலுடன் ஒப்பிடப்பட்டு **ம.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

14.தேவகோட்டை செந்தில் மருத்துவமனை சிகிச்சை செலவு ரூ.16,537/–க்கான அசல் **ம.சா.ஆ.14 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

15. ஆம்புலன்ஸ் செலவு ரூ.14,500/–க்கான அசல் **ம.சா.ஆ.15 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

16. குற்ற இறுதி அறிக்கை சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.16 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணை:**

1.இந்த வழக்கில் 1ம் எதிர்மனுதாரர் எனது மகன் ஆவார். அவர்தான் இருசக்கர வாகனத்தை ஓட்டி விபத்தை ஏற்படுத்தியவர் என்றால் சரிதான். அவர்மீதுதான் விபத்திற்கான முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2ம் எதிர்மனுதாரர் விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் உரிமையாளர் என்றால் சரிதான்.

அவரும் என்னுடைய மகன் என்றால் சரிதான். விபத்தில் இறந்தது என் மனைவி என்றால் சரிதான். இந்த விபத்தானது என் மனைவி அவசரப்பட்டு என் மகன் ஓட்டிய வாகனத்திலிருந்து குதித்ததால் ஏற்பட்டது என்றால் சரியல்ல. அதனால் குற்ற வழக்கானது பிழையுடையது என முடித்து வைக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

2.இந்த விபத்து சமயத்தில் என் மகன் தலைக்கவசம் அணிந்திருந்தாரா என்றால் அணிந்திருந்தார். என் மனைவி அணிந்திருந்தாரா என்றால் இல்லை. எனது மனைவிக்கு விபத்து சமயத்தில் 53 வயது என்பதை காண்பிக்க ஆவணம் எதுவும் உள்ளதா என்றால் அவருடைய ஆதார் அடையாள அட்டை உள்ளது. என் மனைவி விபத்துக்கு முன்பு தையல் தொழில் செய்ததற்கான சான்றிதழ் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அவர் வீட்டில் இருந்துதான் தையல் தொழில் செய்து வந்தார். என் மனைவி மாத வருமானத்தை மிகைப்படுத்தி காட்டியுள்ளேன் என்றால் சரியல்ல. என் மனைவிக்கு நானும் 1, 2 எதிர்மனுதாரர்களும்தான் வாரிசு என்றால் சரிதான். மேற்படி விபத்து வழக்கில் 1, 2 எதிர்மனுதாரர்கள் என் மகன்கள் என்பதாலும் என் மனைவியின் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டது என்பதாலும், காப்பீடு நிறுவனத்திடமிருந்து எவ்வித இழப்பீடும் கோரமுடியாது என்றால் சரியல்ல.

3.அவ்வாறு இழப்பீடு பெறப்பட்டால் அது என் மகன்களுக்குரிய பங்கைக் கழித்துதான் இழப்பீடு கொடுக்கவேண்டியிருக்கும் என்றால் சரியல்ல, எனக்கு மட்டும் தான் இழப்பீடு கிடைக்கவேண்டி மனு தாக்கல் செய்துள்ளேன்., நான் ஓய்வு பெற்ற சிறப்பு சார்பு ஆய்வாளர் என்றால் சரிதான். நான் இழப்பீடு பெற வேண்டி எனது செல்வாக்கை பயன்படுத்தி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவைத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீட்டுத் தொகை அதிகப்படியானது என்றால் சரியல்ல. அதே போல் நான் கோரியுள்ள வட்டி விகிதமும் அதிகப்படியானது என்று சொன்னால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்)– திருமதி.P.கலை நிலா, M.L.,
சார்பு நீதிபதி,

தேவகோட்டை.